2014 ஜூலை 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–45

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் தென் மாவட்டங்களுக்கு என்று பல்வேறு புதிய சலுகைகளை அறிவித்திருக்கின்றார்கள்.* VAT concession *பெறுவதற்கு 50 கோடி ரூபாய் முதலீடு என்று இருந்ததை, 10 கோடி ரூபாயாகக் குறைத்து அறிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோருவதுபோல, மாண்புமிகு அம்மா அவர்கள் அரசால் தனியாக புதிதாக நிதியுதவி எதுவும் செய்யமுடியாது. தொழிற்சாலை ஆரம்பிக்க தொழில் முனைவோர்கள் முன்வருகிறபோது,* TIDCO *மூலம்* joint venture *போடுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தயாராக இருக்கிறது. ஆகையால், அதற்கென்று தனி நிதி ஒதுக்க முடியாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 233, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா, மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

233—

விரிவுபடுத்துதல்

***4663—திரு. அ. அஸ்லம் பாஷா:**

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆம்பூர் சார்பதிவாளர் அலுவலகத்தை விரிவாக்கம் செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஆம். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மூன்றாவது

முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் பதிவுத் துறையிலுள்ள பழுதடைந்த அரசுக் கட்டடங்கள், பழமைவாய்ந்த அரசுக் கட்டடங்கள் மற்றும் தனியார் கட்டடங்களில் இயங்கிவரும் சார்பதிவாளர் அலுவலகங்கள், அனைத்திற்கும் 2011 முதல் படிப்படியாக ஐந்து ஆண்டுக்காலத்திற்குள் சொந்தக் கட்டடம் கட்டுவது என முடிவு செய்யப்பட்டு, அதன்படி 2012–2013 ஆம் நிதியாண்டிற்கு அரசாணை (நிலை) எண் 144, வணிகவரி மற்றும் பதிவுத் துறை, நாள் 20–11–2012–ல், 29 சார்பதிவாளர் அலுவலகங்கள், 17 ஒருங்கிணைந்த பதிவுத் துறை வளாகங்கள் மற்றும் ஆம்பூர் சார்பதிவாளர் அலுவலகம் உள்ளிட்ட 48 சார்பதிவாளர் அலுவலகங்களுக்குத் தனித்தனியே சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு நிருவாக அனுமதியும், ரூ.48.90 கோடி நிதி ஒதுக்கீடும் செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, ஆம்பூர் சார்பதிவாளர் அலுவலகம் இயங்கிவரும் பழைய அரசுக் கட்டடம் முழுமையாக இடிக்கப்பட்டு, ரூ.55 இலட்சம் செலவில் புதிய கட்டடம் கட்டும் பணிகள் முடிவடைந்துள்ளன. மின் இணைப்பு மட்டும் வழங்கப்படவேண்டும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.

திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டத்திலேயே, வேலூருக்கு அடுத்தபடியாக அதிக வருவாயும், அதிக பத்திரப் பதிவும் நடைபெறக்கூடிய சார்பதிவாளர் அலுவலகம் ஆம்பூரில் உள்ள சார்பதிவாளர் அலுவலகம். அங்கு பழைய அலுவலகம் இருந்தபோது கேட்கப்பட்ட கேள்வி இது. தற்போது புதிய அலுவலகம் கட்டப்பட்டு வருகிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். புதிய அலுவலகக் கட்டடத்தில் அலுவலகங்களில் அடிப்படைத் தேவைகளான, குறிப்பாக குடிதண்ணீர் வசதி, காத்திருப்பவர்களுக்கான Waiting Hall அமைத்துத் தரப்படுமா? அந்த அலுவலக வளாகத்திற்குள்ளாகவே பத்திரம் எழுதுபவர்களுக்கான இடம் ஒதுக்கீடு செய்து தரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

ஆம்பூர் நகரத்திலே முத்திரைத்தாள் தட்டுப்பாடு எப்போதும் இருந்துகொண்டிருக்கிறது. அதனால் அதிக விலை கொடுத்து

2014 ஜூலை 23]

முத்திரைத் தாள் வாங்கக்கூடிய சூழ்நிலை அங்குள்ளது. ஏனென்றால், முத்திரைத்தாள் விற்பனை செய்யக்கூடிய உரிமம் பெற்றவர்கள் இரண்டே இரண்டு பேர் மட்டுமே இருக்கிறார்கள். முத்திரைத்தாள் உரிமம் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா? மேலும், பத்திரப் பதிவு அலுவலகம் இருப்பதே தெரியாத அளவிற்கு அந்த அலுவலகத்தைச் சுற்றி ஆக்கிரமிப்புகள் உள்ளன. எனவே, அந்த ஆக்கிரமிப்புகள் அகற்றித் தரப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன். இந்தப் புதிய அலுவலகம் எப்போது கட்டி முடிக்கப்பட்டு, செயல்பாட்டிற்கு வரும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுமக்களின் வசதிக்காகக் கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் புதிய சார்பதிவாளர் அலுவலகத்தில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதற்கேற்ப, அனைத்து வசதிகளும் அதில் முழுமையாக நிறைவேற்றித் தரப்படும். காத்திருப்போருக்கு Waiting Hall, குடிதண்ணீர் வசதி போன்ற அனைத்து வசதிகளும் முழுமையாக ஏற்படுத்தித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், முத்திரைத்தாள் தட்டுப்பாடு குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். உரிமம் பெற்ற முத்திரைத் தாள் முகவர்கள் இரண்டு பேர்தான் இருக்கிறார்கள் என்றார். முத்திரைத்தாள் உரிமம் வேண்டுவோர் யாராவது இருந்தால், பதிவுத் துறையின் தலைவர் (I.G.R.) அவர்களை அணுகினால், நிச்சயமாக அதற்குண்டான வழிவகையும் ஏற்படுத்தித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சார்பதிவாளர் அலுவலகக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு, பதிவுத் துறை அலுவலகத்திலிருந்து தகவல் பெறப்பட்டவுடன், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் திருக்கரங்களால் திறக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். புதிய கட்டடத்தைச் சுற்றியுள்ள முள் வேலியும், ஆக்கிரமிப்புகளும் அகற்றப்பட்டு, புதிய சார்பதிவாளர் அலுவலகம் புதுப் பொலிவுடன் இருக்கும் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.

திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 234, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. சுப்பையா (குறுக்கீடு) திரு. ரெங்கராஜன் நேரமில்லை. (குறுக்கீடு) சரி, சுருக்கமாகக் கேள்வி கேளுங்கள்.

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சுருக்கமாகக் கேட்கிறேன். நீங்கள் மணி அடித்தால்தான் எனக்கு B.P. ஏறிப் போகிறது, வேறு ஒன்றும் இல்லை.

பட்டுக்கோட்டை நகரில் இருக்கக்கூடிய சார்பதிவாளர் அலுவலகங்கள் தனியாருக்குச் சொந்தமான வாடகைக் கட்டடத்தில் இயங்கிக்கொண்டு வருகின்றன. அதற்கு புதிய கட்டடம் வேண்டுமென்று அந்தப் பகுதியிலுள்ளவர்கள் கேட்கின்றார்கள். பட்டுக்கோட்டை தாலுகா அலுவலகத்தில் இருக்கக்கூடிய காலி இடங்களில் புதிய கட்டடம் கட்டுவதற்கான வாய்ப்பிருக்கிறது. எனவே, அந்தச் சார்பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை சார்–பதிவாளர் அலுவலகம் தற்சமயம் தனியார் கட்டடத்தில் இயங்கி வருகிறது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, தாலுகா அலுவலகத்தில், கட்டடம் கட்டுவதற்குத் தேவையான இடவசதி இருந்தால், அது பதிவுத் துறையின் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, அந்த இடத்திற்கேற்ப நிச்சயமாக சொந்தக்

2014 ஜூலை 23]

கட்டடம் கட்டித் தருவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 234, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. சுப்பையா, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

234—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

***34771—திரு. இ. சுப்பையா:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தொகுதி, அம்பாசமுத்திரம் ஊராட்சி ஒன்றியம், மன்னார்கோவில், வாகைகுளம் மற்றும் பிரம்மதேசம் ஆகிய கிராமங்களுக்கு பிரம்மதேசம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பிரம்மதேசம், வாகைகுளம், மன்னார்கோவில் மற்றும் அயன்திருவாலீஸ்வரம் ஆகிய நான்கு ஊராட்சிகளில் உள்ள 17 குடியிருப்புகளுக்குத் தாமிரபரணி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு 96 இலட்சத்து 31 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் பிரம்மதேசம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் இத்திட்டம் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்தக்